என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, ஒரு நிமிடமும் தரமாட்டேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு, நீங்கள் முதலில் உங்கள் இடத்திற்குப் போங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள், இப்படியெல்லாம் வற்புறுத்தி என்னிடம் அனுமதி வாங்க முடியாது. (குறுக்கீடுகள்) நானாகப் பார்த்து அனுமதி கொடுத்தால்தான் உண்டு. ஆகவே, நீங்கள் இப்படி வற்புறுத்த முடியாது. அதனால் நீங்கள் உட்காருங்கள். நாளைக்குப் பார்க்கலாம், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

(ஆ) திருச்சி மாவட்டம், பொத்தமேட்டுப்பட்டி, இரும்புக் கடை வெடி விபத்தில் பாதிக்கப்பட்டோருக்கு நிதியுதவி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.என். நேரு அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், நீங்கள் உட்காருங்கள்.*

***திரு. கே.என். நேரு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டம், மணப்பாறை அருகில் இருக்கின்ற பொத்தமேட்டுப்பட்டி என்ற இடத்தில் அருள் ஆனந்த் என்பவர் மாதா டிரேடர்ஸ் என்கின்ற பழைய இரும்புக் கடை ஒன்றை நடத்திக் கொண்டு வருகிறார். ஜூன் 26 ஆம் தேதி ஜீப்பில் வந்த சிலபேர் ஒரு மூட்டை இரும்பு உருண்டையை அவர்களிடம் எடை போட்டுக் கொடுத்துவிட்டு, அதற்கான பணத்தை வாங்கிச் செல்கிறார்கள். அப்படி பணம் வாங்கிச் சென்றபிறகு, ஜூன் 29 ஆம் தேதி அந்த இரும்பு உருண்டையை ஸ்கிராப் ஆக உடைக்க வேண்டுமென்று எண்ணி அருகில் இருக்கின்றவரை அழைத்து அதை உடைக்கச் சொல்கிறார். அருகில் இருக்கின்றவர் சென்று இரும்பு உருண்டையை உடைக்க, அது வெடித்து, அந்த இடத்திலேயே கடைக்காரருடைய கால்கள் இரண்டும் போய்விட்டன. யார் அந்த இரும்புக் குண்டை உடைத்தாரோ அவர் அதே இடத்தில் இறந்துபோய் விட்டார். பக்கத்தில் பஞ்சர் கடை வைத்திருந்த திரு. பாலு அவர்களும், திரு. கனகராஜ் அவர்களும் அந்த வழியாகப் போகின்றபோது, இந்த இரும்புத் துகள்கள் அவர்கள்மீது பாய்ந்து படுகாயமுற்று மருத்துவமனையில் இருக்கின்றார்கள். இதை திரு. நூர்முகம்மது என்பவர் உடனடியாக காவல் துறைக்கு நேரடியாகச் சென்று தகவல் சொல்லியிருக்கிறார். இதுவரை எந்தவிதமான உதவியும் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. இறந்தவர் மிக மிக*

2017 ஜுலை 10] [திரு. கே.என். நேரு]

சாமானியர். அதேபோல காயமுற்றவர்கள் இரண்டுபேருமே மிகவும் ஏழ்மையான, தினக்கூலி அடிப்படையில் பணியாற்றுகிறவர்கள். திரு. கனகராஜ் என்பவர் சர்க்கரை நோயாளி. எனவே, அரசு சார்பாக அவர்களுக்குத் தகுந்த நிதியுதவி வழங்கப்படுமா என்பது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டம், மணப்பாறை வட்டம், கண்ணுடையான்பட்டி கிராமம், பொத்தமேட்டுப்பட்டி பகுதியிலுள்ள பழைய இரும்பு கடையில் நடந்த வெடி விபத்தில் திரு. மாரியப்பன், தகப்பனார் பெயர் இராமசாமி என்பவர் 29–6–2017 அன்று உயிர் இழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்து, அவர் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொண்டேன்.*

திரு. மாரியப்பன் குடும்பத்திற்கு ஒரு இலட்சம் ரூபாய் மாண்புமிகு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன். மேலும், இச்சம்பவத்தில் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் திருவாளர்கள் அருள் ஆனந்த் மற்றும் கனகராஜ் ஆகியோருக்கு தலா 50 ஆயிரம் ரூபாயும், சிறு காயமடைந்த திரு. பாலசுப்பிரமணியன் அவர்களுக்கு 25 ஆயிரம் ரூபாயும் மாண்புமிகு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

திரு. அருள் ஆனந்த், திரு. கனகராஜ், திரு. பாலசுப்பிரமணியன் ஆகியோர் தனியார் மருத்துவமனையில் சேர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர். இவர்களுக்கு உரிய சிகிச்சை அளிக்குமாறும், தேவையான உதவிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்றும் மாவட்ட நிருவாகத்திற்கு ஆணையிட்டுள்ளேன்.

இந்த வெடி விபத்து குறித்து உரிய விசாரணை செய்து தக்க நடவடிக்கை எடுக்க மாவட்ட நிருவாகத்திற்கும், காவல் துறைக்கும் நான் உத்தரவிட்டுள்ளேன் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.